விலை: சதம் 60

# ஈழநாடு

THE EELANADU

மலர் 23 ஆனி 20 றம்ழான் 1 இதழ் 140

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 4-7-1981

தரத்தினில் சிறந்த
மான் - முயல் - வரிக்குதிரை
யானை - விளக்கு
சந்திரிக்கா - பூ
புலிமார்க் ஒடுகளையே
பாவியுங்கள்
மு.தா.பொன்னம்பலம்
36, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்
போன்: 7493

## 'அமிர்' வரவில்லை

[கொழும்பு]

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் லண்டனிலிருந்து கடந்த இரவு நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்பட்டபோதிலும் பிரிட்டனில் விமான ஊழியர்களில் ஒரு பகுதியினர் வேலை நிறுத்தம் செய்ததன் காரணமாக அவர் நாடு திரும்பவில்லை என கூட்டணி வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

லண்டனிலிருந்து நாடு திரும்பும் வழியில் திரு. அமிர்தலிங்கம் இந்தியாவுக்குச் சென்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்த பின்னர் எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன் இங்கு வந்து சேருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. [ம-இ]

# இன்றுமுதல் மீண்டும் மின்சார வெட்டு அமுல்!

[கொழும்பு]

நாடு முழுவதும் இன்று முதல் மீண்டும் மின்சார வெட்டு அமுலுக்குக் கொண்டு வரப்படவுள்ளது. 'லக்ஸபான' நீர் மின்சார உற்பத்தி நிலையத்தில் உள்ள இயந்திரம் ஒன்று திடீரெனப் பழுதடைந்ததை அடுத்தே மீண்டும் மின் வெட்டு அமுல் செய்யப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மின்வெட்டுக்கான நேரம் குறிப்பிடப்படாமல் பாவனையாளர்களுக்கு அதிக அசௌகரியங்கள் ஏற்படாதவாறு இது அமுல்செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ம-இ]

# தீக்கிரையான யாழ். நூலகம் ஞாபகச் சின்னமாக இருக்கும்!

## "நூல்நிலைய அபிவிருத்திக்கு நிதி உதவி அளிக்கவும்"

### யாழ். முதல்வர் வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

யாழ் பொதுசனநூலகத்தில் எரிந்தபகுதிகள் ஞாபகச்சின்னமாக, என்றும் அப்படியே இருக்கும். அது மீண்டும் கட்டப்படாது. நூல்நிலைய குழுவினரின் ஆலோசனையுடனும்,சபை உறுப்பினர்களின் விருப்பத்துடனும் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அந்த எரிந்தபகுதி என்றும் நினைவுச் சின்னமாகவே இருக்கும்,"

யாழ். நகரமண்டபபகுதியில் தற்காலிக நூல் நிலையத்தைத் திறந்துவைத்துப்பேசிய யாழ். முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

நல்லூர் எம்.பியும் கூட்டணித் தலைவருமான திரு.எம். சிவசிதம்பரம் பேசுகையில்; பொதுசன நூல் நிலையம் புனரமைப்பு செய்யப்படும்போது எரிந்ததற்கு அடையாளமாக வருங்கால சந்ததியினருக்கு ஞாபகம் ஊட்டும் வகையில், ஒரு சின்னம் இருக்கக் கூடியதாக, கட்டப்படவேண்டுமென்றும், அந்த ஞாபகச்சின்னம் தமிழினம் இருக்கும் வரை நிலைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டபோதே யாழ். முதல்வர்; எரிந்த பகுதிகளை அப்படியே விடமுடிவு செய்யப்பட்டுள்ள தாகவும், கூட்டணி தலைவரின் வேண்டுகோள் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுவிட்டதாகவும் கூறினார்.

யாழ். முதல்வர் திரு இராஜா விசுவநாதன், உதவி முதல்வர் திரு. சேவியர் மற்றும் உறுப்பினர்கள் மங்கள விளக்கேற்றி வைத்தனர்.

பிரான்சிஸ் ஜோசப் அடிகளார், நூல்நிலைய குழு உறுப்பினர்கள், மாநகரசபை உறுப்பினர்கள், சபை ஊழியர்கள் மற்று பலர் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்,

மில்க் வைற் அதிபர் திரு. க. கனகராசா, 107 தமிழ்ப் புத்தகங்களையும், 25 ஆங்கிலப் புத்தகங்களையும் யாழ். முதல்வரிடம் கையளித்தார். இலங்கை கலை இலக்கிய நண்பர் ஒன்றியம் சார்பில் திரு ஐ. சச்சிதானந்தன் 42 தமிழ் நூல்களை வழங்கினார்.

முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் மேலும் கூறியதாவது:

"உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் அண்மையில் நடந்த நாச வேலைகளை அறிவீர்கள். உலக நாகரிக வரலாற்றில்

[6ம் பக்கம் பார்க்க]

## "அபாயம் நீங்கவில்லை"

### - யாழ். எம். பி.

[யாழ்ப்பாணம்]

"தமிழ் மக்களுக்கு இன்னும் அபாயம் இருக்கிறது. விழிப்புடன் இருக்கவேண்டும். சம்பவங்கள் ஒரு திருப்புமுனையாக அமையவேண்டும். இல்லாவிட்டால் இன்னும் பல இன்னல்கள், கஷ்டங்கள் ஏற்படும். இனிமேல்தான் தமிழ் மக்களுக்கு சோதனை மிக்க காலம் இருக்கிறது".

யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் மேற்படி வைபவத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார். திரு. யோகேஸ்வரன் மேலும் கூறியதாவது:

'-ஜனாதிபதி நூலகம் எரிந்தத்ற்கோ, கடைகள் கட்டங்கள் வீடுகள் எரிந்ததற்கோ அனுதாபம் தெரிவிக்காதது பாரதூரமானது. 2 வருடத்திற்கு முன்னர் பொலிஸ் என்னைக் கொல்லப்போவதாகவும் வீட்டைக் கொளுத்தப்போவதாகவும் கோஷமிட்டனர். அது இன்று நிறைவேறிவிட்டது.

"2 வருடத்திற்கு முன்னர் கச்சேரியடியில் வானை மறித்து பிரயாணிகளைப் பொலிசார் தாக்கினார்கள். நான் நேரடியாக அங்கு சென்று காயம் அடைந்தவர்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டு பொலிஸ் அதிபருக்கு அறிவித்தேன். அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டப்பட்டனர். 5 சிங்கள பொலிசார் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டனர். மேலிடத்தில் இருந்து உத்தரவு வந்ததும், அவர்கள் யாழ். பொலிஸ் நிலையத்திலிருந்து நாகவிகாரைக்கு ஊர்வலமாகச் சென்றனர். வழியில் என் வீட்டுக்கு முன்னால் நின்று "யாழ். எம். பி. யைக் கொலை செய்வோம்" என்று கோஷமிட்டனர் இது பற்றிப் பாராளுமன்றத்திலும் கூறினேன். 2 வருடத்திற்கு முன் கூறியபடி இன்று செய்துவிட்டார்கள்" என்றார்.

ஆணையாளர் திரு. கே. சிவஞானம் பேசுகையில் நூலகத்தை கட்டியெழுப்ப எல்லோரும் ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். [சு]

## ரூ. 25,000 சம்பளப்பணம் கொள்ளை: சந்தேக நபர்கள்

### அடையாளம் காணப்படவில்லை!

[கிளிநொச்சி]

கிளிநொச்சி, இந்துமகாவித்தியாலய ஆசிரியர் சம்பளப் பணம் 25 ஆயிரம்ரூபா கொள்ளை சம்பந்தமாகநடைபெற்ற அடையாளஅணிவகுப்பில், சந்தேகநபர்கள் இருவரும் அடையாளம் காணப்படவில்லை.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் கிளிநொச்சி இந்து மகாவித்தியாலய ஆசிரியர்களின் சம்பளப்பணம் 25,000 ரூபா கிளிநொச்சி வங்கியிலிருந்து மகா வித்தியாலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்ட போது, துப்பாக்கி இளைஞர் இருவரால் அப்பணத்தை எடுத்துச்சென்ற ஆசிரியர் ஒருவர் சுடப்பட்டதுடன் மேற்படி பணமும் கொள்ளையடிக்கப்பட்டது.

இக்கொள்ளை சம்பந்தமாக 8ம் வாய்க்கால் உருத்திரபுரத்தைச்சேந்த்த செ. ஆறுமுகம், குமரபுரம் பரந்தனைச்சேர்ந்த க. தவபாதம் ஆகியோர் சந்தேகத்தின்மீது கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் இருவரும் கிளிநொச்சி நீதிமன்றத்தில் பதில் நீதவான் திரு. டபிள்யூ கார்த்திகேசு முன்நிலையில் ஆஜர் செய்யப்பட்டு அடையாள அணிவகுப்புகுட்படுத்தப்பட்ட போது எவரும் அடையாளம் காணப்படவில்லை,

முதலாவது சந்தேகநபர் சார்பில் எவரும் ஆஜராகவில்லை. இரண்டாவது சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணிகளான திரு. எஸ். அம்பிகைபாகன், திரு. ரி. சிறீபதி ஆகியோர் ஆஜராகினர். பொலிஸ் தரப்பில் சார்ஜன்ட் திரு.எஸ். குணரத்தினம் ஆஜராகி சந்தேக நபர்களை அடையாள அணிவகுப்புக்குட் படுத்தினர். சந்தேகநபர்கள் அடையாளம் காணப்படாததனால் சந்தேக நபர்களில் ஒருவரான தவபாதத்தை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு இவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கோரியபோதிலும் சந்தேக நபர்களிடமிருந்து சம்பளப் பணம கொண்டுசெல்லப்பட்டபை எரிக்கப்பட்டநிலையில் மீட்கப்பட்டது என்றும் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தில் 19000 ரூபாவும், கொள்ளைக்கு பாவிக்கப்பட்ட துப்பாக்கியும், சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளன என்றும் சந்தேகநபர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டால் இக்கொள்ளை சம்பந்தமாக பொலிசாரால் தேடப்பட்டுவரும் ஏனைய மூவரையும் கண்டு பிடிக்க முடியாதென்றும் சந்தேக நபரைப் பிணையில் விட வேண்டாம் என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

[6ம்-பக்கம் பார்க்க]

## இன்று உண்ணாவிரதம்

[வவனியா]

யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த அசம்பாவித சம்பவங்களை ஆட்சேபித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் உண்ணாவிரதம் இன்று வவனியா முற்றவெளி மைதானத்தில் நடைபெறும்.

உண்ணாவிரதத்தில் கூட்டணி எம். பிக்களும், மகளிர்பேரவை, இளைஞர் பேரவை உறுப்பினர்களும், இந்து, கிறிஸ்தவ, பௌத்த தருமர்களும் பங்கு பற்றுவர். [து]

## 53பேருக்கும் பிணை அனுமதி

[கொழும்பு]

கொழும்பில் ஈரானிய தூதரகத்தைத் தாக்கியதாகவும் ஆர்ப்பாட்டம் செய்ததாகவும் கடந்தமாதம் 19ம் திகதி கைதுசெய்யப்பட்ட 53பேரும் பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். [ ]

# வரி விளம்பரம்

## தேவை

டாக்றூம் வேலையில் (Dark room work) அனுபவமுள்ள வர் உடனே 'செல்லப் வில் ஸ்ருடியோ', கன்னாட்டி, யாழ்ப்பாணம் விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். 0184

புடவை ஸ்தாபனத்திற்கு அனுபவம் வாய்ந்த பெண் விற்பனையாளர்கள் தேவை. நற்சான்றுப் பத்திரங்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளவும். சேல்ஸ், 14-ஏ மின்சாரநிலையவீதி, நவீன சந்தை, யாழ்ப்பாணம் 0185

யாழ்ப்பாணம், றோயல் டீஸ் பென்சறிக்கு நல்ல ஆங்கில, கணித அறிவுள்ள பெண் உதவியாளர் உடன் தேவை தராதரம் மற்றும் நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். 0205

## விற்பனைக்கு

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்கு முன்னால் அத்தி பாரத்துடன் கூடிய ஆறு பரப்புக் காணி விற்பனைக் குண்டு. தொடர்புகொள்க: சி. அப்புத்துரை மாரியம்மன் கோவிலடி, மாவிட்டபுரம். 0189

கூடுதல் பலன் தரக் கூடிய நல்ல இன செவ்விளனி தென்னங்கன்றுகள் விற்பனைக் குண்டு மில்க்வைற் யாழ்ப்பாணம் 0171

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் பின்னுள்ள 'வயித்தைத் தோட்டக்காணி 5 பரப்பு விற்பனைக்குண்டு, தொடர்பு: இ. இராசையா, 'ரதிவாசம்' கோப்பாய் தெற்கு, கோப்பாய். 0162

3½ பரப்பு காணி மோட்டர் கிணறுடன் இரண்டு வீடுகள் கட்ட உகந்தது. கொண்டாவில் பஸ் டிப்போவுக்கு முன்னால் போகும் றோட்டில் வரும் புகையிரதக்கடவைக்கு அருகாமையில் உண்டு. புகையிரத நிலையத்திலிருந்து ¼ மைல் தொலைவில் உள்ளது. சி. ஐயாத்துரை, மிஷன்பாடசாலை ஒழுங்கை, குமரகோட்டம், கொண்டாவில் 0195

தோட்டத்திலிருந்து மாம் பழங்கள் விற்பனைக்குண்டு, மனேஜர், 5, மணிக்கூண்டுக் கோபுரவீதி, யாழ்ப்பாணம். 0199

கந்தர்மடம் மணத்தறை லேனில் 2½ பரப்புக் காணியும், வேறு காணிகளும் விற்பனைக் குண்டு தா. சிவபாதசுந்தரம், 64/1, பரங்சால் வீதி, யாழ்ப்பாணம். 0204

இரண்டு குதிரை வலுவுள்ள (Brook) தண்ணீரிறைக்கும் இயந்திரம் விற்பனைக்குண்டு. நேரில் பார்த்து விலை மதிக்கவும் திரு. க சுதாகரன், 37/12, முதலாம் ஒழுங்கை, பிறவுண் றோடு, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 0200

திருநெல்வேலி இராசபாதை வீதியில் கூட்டுறவுப் பால் பண்ணை வீதி சந்தியில் ஒன்பது பரப்பு தோட்டக்காணி விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும்; த மகாதேவன், மகாதேவ வாசம், சைவப்பாடசாலை வீதி, கொண்டாவில் மேற்கு. 0209

## தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனத்திற்கு வியாபார அனுபவம் உள்ளவரும் வர்த்தகக் கணக்கியலில் சித்தி பெற்றவரும் ஆங்கிலத்தில் எழுத வாசிக்க தெரிந்தவருமான கவுண்டர் கிளார்க் தேவை. 10-7-81-ந் திகதிக்கு முன் தகைமை, அனுபவத்தைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 0213, C/o 'ஈழநாடு' லிமிட், யாழ்ப்பாணம். 0213

## பயிற்சி

புதிய குளிரூட்டல் பயிற்சி வகுப்புக்கள் விரைவில் ஆரம்பமாகின்றன. விண்ணப்பங்கள் 10-7-81க்கு முன்னர் கிடைத்தல் வேண்டும் அதிபர், ஐ ஏ. ஆர். 615 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [0173]

## வகுப்புக்கள்

மின் இணைப்பு, மோட்டார் இயந்திரவியல், மின் ஒட்டுத் தொழில் நுட்பவியல் (Electrical Wiring, Motor mechanism Electrical Welding) 4 மாத செய்முறை அறிமுறைப் பயிற்சி வகுப்புக்கள் 11-7-81இல் ஆரம்பம். தங்குமிட வசதியும் உண்டு. C. E. T. யாழ்ப்பாணக் கல்வி நிலையம், (சாந்தி சினிமாவிற்கு முன்னால்) 22, இராமநாதச் செட்டியார் வீதி, யாழ்ப்பாணம், [0175]

## பின் முற்றுகும் கட்டளை பற்றிய அறிவித்தல்

மூ. க. முத்துக்குமார்,
சட்டத்தரணி,
பருத்தித்துறை

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

பருத்தித்துறையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை அம்பிகைபாகர் என்பவரது மரணசாதனமில்லா சொத்து விடயத்தில்

மரணமடைந்தவர்

மரணசாதன நியாயாதிக்கம் 1115

கணபதிப்பிள்ளை அம்பிகைபாகர் மைம் பெண் இராசபாக்கியம், பருத்தித்துறை

மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலேபெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடரப்பட்டு அதில் அதற்கிணங்கபின்முற்றுகும்கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1981-ம் ஆண்டு ஆடி மாதம் 24-ம் திகதியன்று முற்பகல் 9-00 மணிக்கு இம் மன்றின் முன் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்முற்றுகும்கட்டளை ஏன் முற்றுணராக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

இன்று 1981-ம் ஆண்டு சித்திரை மாதம் 15-ந் திகதி நீதிமன்றின் கட்டளைப்படி

ஒப்பம்
க. செல்வராஜா,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்று,
(0206) பருத்தித்துறை.

பச்சிலைப்பள்ளி
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பளை.

## வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்

பச்சிலைப்பள்ளி ப நோ. கூ சங்கத்தில் வெற்றுச்சாக்குக்கு கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. மீளப்பெறும் வைப்பாக ரூபா 100/- செலுத்தி விண்ணப்பப்படிவங்களை சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஏற்கனவே வைப்புப் பணம் செலுத்தியோர் கட்டத் தேவையில்லை. சங்க அலுவலக நேரத்தில் வெற்றுச்சாக்குகளைப் பார்வையிடலாம். கேள்விப் பத்திரங்கள் யாவும் 15 7. 81க்கு முன் கிடைக்கக் கூடியதாக பொதுமுகாமையாளர், பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம், பளை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வெற்றுச் சாக்கு கேள்வி விண்ணப்பம்" எனக் குறிப்பிடவும்.

இங்ஙனம்,
பொதுமுகாமையாளர்,
பச்சிலைப்பள்ளி ப நோ. கூ. ச. பளை

29 6. 81 0183

## பின்னுறுதிக் கட்டளைக்கான அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதி மன்றம்

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகமுத்து மகள் இரத்தினத்தின் மரணசாதன மற்ற சொத்துக்கள் பற்றிய விடயம்.

மரணமெய்தியவர்.

நாகமுத்து திருநாவுக்கரசு, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்.

மனுதாரர்.

மரணச்சொத்து நியாயாதிக்கம்
இல. 96 எதிர்.

1. இளையதம்பி சின்னத்துரையும் பெண்
2. செல்லம்மாவும்
3. தம்பையா கணேசன்
4. தம்பையா சிறிஸ்கந்தா
5. முதலித்தம்பி சிவபாதமும் பெண்
6. இராஜேஸ்வரியும் எல்லோரும் புன்னாலைக்கட்டுவன் தெற்கு சுன்னாகம்

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரண சாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981ஆம் ஆண்டு ஆடி மாதம் 10-ஆந் நாளன்று முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுணராக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி.
சு. வி. கணேசன்,
பதிவாளர்.

1981ம் ஆண்டு ஆனி மாதம் 23ஆந் நாள்.

வரைவு
வி. எஸ். கணேசலிங்கம்
மனுதாரர் தரணி.

0207

## லேத் வேலையாள் தேவை

லேத் வேலையில் நன்கு அனுபவமுள்ளவர் உடனடியாக தேவை

அனுபவத்தையும் எதிர்பார்க்கும் ஊதியத்தையும் குறிப்பிட்டு நற்சாட்சிப் பத்திரங்களுடன் கடித மூலம் விண்ணப்பிக்கவும்.

484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தில் நடந்த அக்கிரமங்கள் பற்றி ஒரு நூல் உருவாகிறது

வரதர் வெளியீடு அளிக்கும்

## யாழ்ப்பாணம் எரிகிறது!

"நீலவண்ணன்" (12 மணி நேரம் ஆசிரியர்)

எல்லா நிகழ்ச்சிகளையும், ஒழுங்காக, விபரமாக, சுவையாகத் தொகுத்துள்ளார்

✶ அநேக படங்களுடன் ✶

6-7-81ல் வெளிவருகிறது ரூபா 8/-
(தபாலில் பெற ரூபா 10-50 அனுப்புக)

**ஆனந்தா புத்தகசாலை,**
226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
[0196]

## Star Class Tourist Hotel VACANCIES

Applications are invited for the following posts

| | | | |
|---|---|---|---|
| 1. | HOUSE—KEEPER | — | Female |
| 2 | RECEPTIONIST | — | Male/Female |
| 3 | KITCHEN CLERK | — | Male |
| 4. | STORE KEEPER | — | Male |
| 5. | TRAINEE STEWARDS | — | Male |
| 6. | DOOR MEN/BELL BOYS ROOM BOYS | — | Male |

Qualification and Experience

Position 1— Middle aged lady with fluency in English language. Possessing House Keeping Experience and Supervisory capacity. Diploma in Home Science prefered.

Position 2— 3 & 4 Pass in G. C. E. (O/L) with credit pass in English and Arithmetic.

Position 5— & 6 G C E. (O/L) with good knowledge in English.

Experience for all posts an added Qualifications.

Please apply on or before 15th July, 1981.

**Advt No. 0174,**
**c/o Eelanadu, P. O. Box No. 49, Jaffna.**

0174

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

வழ. இல. ஈடு/13890

மேற்படி வழக்கில் வாதி யாழ்ப்பாணம் கந்தர்மடம் அரசடி வீதி செல்லத்துரை மகாலிங்கத்துக்கு விற்பனவுத் திகதி வரை போகவேண்டிய தீர்வைத்தொகை 5406 ரூபா 62 சதமும் வழக்குச்செலவு 435 ரூபா 90 சதமும் விற்பனவுச் சலார்களும். இத்தொகையைப் பிரதிவாதிகளாகிய யாழ்ப்பாணம் கந்தர்மடம் அம்பலவாணர் ஜெகநாதனிடமும் பெண் கமலாதேவியிடமும் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம்1981 வருஷம் ஓகஸ்ட் மாதம் 4-ந் திகதி(4-8-81) செவ்வாய்க்கிழமை காலை பத்து மணி தொடக்கம் அவ்வாதனத்தில் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று கரம்பன் இறை "கூளை நின்ற புலம்" தெற்பரப்பு 5 அதன் சேர்மானங்களும். இதற்கு எல்லை கிழக்கு சவரிமுத்து பெண் இரத்தினத்தின் காணி வடக்கு யேக்கப் மகள் பெண் றெசி. மேற்கெல்லைக் காணிக்குரிய ஒழுங்கை, மேற்கும் தெற்கும் முத்துக்குமாரு பெண் விஜயலட்சுமியின் காணி அத்துடன் மேற்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் தண்ணீர்பகிரும் வழிவாய்க்கால் பாவிப்புருத்தும். பதிவு இல யாழ்ப்பாணம் C 319/287

வி. செ. குட்டிப்பிள்ளை,
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும் விலைமதிப்பாளரும்.
643, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

[0202]

### மணிவாக்கு

கற்காமலிருப்பதைவிடப் பிறக்காமலிருப்பதே நல்லது. ஏனெனில் அறியாமைதான் துர்ப்பாக்கியத்தின் மூலவேர். — பிளேட்டோ

# நமது நோக்கு

## உண்ணாவிரதம்

காப்பது விரதம். இரண்டுசொற்கள்கொண்ட வசனத்தில் விளக்குகிறார் ஔவைப்பிராட்டியார்.

பிறஉயிர்களைத் துன்பம் செய்யாமல் அவைகளைக் காப்பாற்றுவதே விரதமாகும். உணவைத்தவிர்த்தல், உணவைக்குறைத்தல், இந்த ஆத்மீகப்பண்பு வளர்வதற்கு அவசியம்.

மேனாட்டு அறிஞர்களும், வைத்திய நிபுணர்களும் விஞ்ஞான ரீதியில் இன்று வற்புறுத்தும் இந்தஉண்மை எங்களுடைய பரம்பரைச் சொத்தாக வந்திருக்கிறது.

அதேசமயம் பரம்பரைச் சொத்தைக்கட்டுப்பாடின்றி செலவழிக்கும் சந்ததியினராக நாம் மாறிக்கொண்டு வருவதால் எங்களுக்கு ஆத்மீகப் பழமும், மண்ணுலகச் செல்வமும் குன்றிவந்திருக்கிறது.

இந்த அடிப்படை உண்மையை உணருங்காலம் வாசற்படியில் வந்திருக்கிறது. இன்று நாட்டின் தமிழ்ப்பிரதேசங்களில் உண்ணாவிரதம் அநுட்டிப்பது மிகப்பொருத்தமானதும் அவசியமானதும்.

நிலையுள்ள நம்முன்னோர் ளித்த அருஞ்செல்வத்தைப் பாதுகாக்கத் தவறியதால் எமக்குக் கிடைப்பது தெய்வதண்டனையோ என்று மனம் நோவது தவறா?

எம்மைச் சுற்றியுள்ள தீமை சூழ்ந்திலும் பொருத்தமில்லாமுறையில் தேவைகளைப் பெருக்கும் பழக்கம் இப்போது மிகவேகமாக வளர்ந்துகொண்டுவருகிறது.

எம்மைச்சுற்றியுள்ள அரசியல்முறை பாம்புசுற்றுவதுபோலச் சுற்றிவளைத்து, இறுக்கி நம்மை நாசம் செய்துவருகிறது. துப்பாக்கியோ நெருப்போ, இன்னும் எந்த வேட்டிலோ இவையெல்லாம் எமது எதிரிகள்! நாம் தேடிக்கொண்டவையாவெனபது இன்று நடைபெறும் உண்ணாவிரத இயக்கத்தில் உட்புறஆராய்ச்சிக்குரியது.

கல்வியில், மருத்துவத்தில், தொழிலில், சிறப்பாக வியாபாரத்தில், கிழக்கரத்திலுள்ள மக்களைச் சுரண்டிப் பிழைக்கிறோமா? உழைத்து உழைத்து பயனின்றிமல், அந்த அயர்ச்சி காரணமாக கிராமங்கள் அழிந்து போகின்றன. தியாக உணர்வுடன் எங்கள் வீட்டைச் செம்மைப்படுத்தும் வாலிப இயக்கம் உருவாகவேண்டும்.

தமிழ்மக்கள் தம்நியாயமான உரிமைகளைப் பெறுவதானால் உண்ணாவிரதம், ஒருஅரசியல் தந்திரமாகாமல் கட்சிபேதமற்ற அடிப்படையில், ஆழமாகவும், அகலமாகவும் நடைபெறவும், ஆத்மீகப்பலத்தை வளர்க்கவும் உதவுமானால், அது பொதுமக்கள் இயக்கத்தை உருவாக்கமுடியும்? ஆட்சியாளரின் மனப்போக்கை மாற்றவல்லது.

கட்சிப்பலத்தை வளர்க்கும் கண்துடைப்பு வைபவமாயிருப்பின், ஒரு கும்மாளத்தில் முடியுமென்ற எச்சரிக்கையும் அவசியமானது.

## இலங்கை - சீனஉறவு

சீன வெளிநாட்டமைச்சரும் உதவிப் பிரதமருமான திரு. ஹுவாங் ஹுவாவின் மூன்று நாள் இலங்கை விஜயம் ஏற்கனவே உண்டான இவ்விருநாடுகளின் நட்புறவை பலப்படுத்தியிருக்கிறது.

சீன வெளிநாட்டமைச்சரின் இந்திய விஜயம் இந்த வகையில் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. இந்தியப் பிரதமர் தவசீனத்தின் புதிய நேசக்கரத்தை ஏற்றுக் கொண்டாரென்பது இந்துசமுத்திரப் பிரதேச நாடுகளுக்கு நற்பயன் அளிக்க வல்லது.

அரசியல் ஞானம், ராஜரீகம் இந்தியப் பிரதமரின் இரத்தத்தில் ஊற்றெடுப்பது வியப்பல்ல! எனவே சீனவுக்குவிஜயஞ் செய்யவும் பழைய எல்லைத்தகராறுகளைச் சுமுகமாகத் தீர்க்கவும் அவர் உடன்படுதுதெரிவிப்பது எங்கள் நாட்டுக்கும் நற்செய்தியாகும்; நலமளிக்கும்.

ஆசியாவின் இருபெரும் பழமை வாய்ந்த தேசங்களின் நடுவில் நாம் ஒரு சிறுநாடு ஆனால் இருக்குமிடம் வல்லரசுகளுக்கு வாய்ப்பளிக்கவல்லது! எனவே ஜாக்கிரதை.

சீனவுடன் உள்ள எங்கள் புராதன நட்பு றப்பர் அரிசி ஒப்பந்தத்தால் வலுப்பெற்றுள்ளது. எங்கள் றப்பர் உற்பத்தி பெருகவும் அரிசித்தட்டுப்பாடு நீங்கவும் சீன உதவ முடியும்.

இந்துசமுத்திர அமைதிக்கு சீன எமக்கு ஆதரவளிக்குமென்றும் சமுத்திரம் மட்டும் அல்ல நிலப்பிரதேசங்களிலிருந்து வேற்று நாட்டுப்படைகள் வெளியேறவேண்டும் என்றும் சீனத்தலைவர் வற்புறுத்தியிருக்கிறார்.

எது எவ்வாறாயினும் நாம் அணிசேராக் கொள்கைக்கு முரண்பட முடியாது. சீனவுடன் நடத்தும் பண்டமாற்று இருக்கப்போட்டு சுருப்பிடிக்கும் வகையில் நீளவிடுவது விவேகமாகாது.

### மகா கும்பாபிஷேகம்

[புலோலி]

வல்லிபுரக் குருக்கட்டு சித்தி விநாயகராலய மகாகும்பாபிஷேகம் இம்மாதம் 13ம் திகதி நடைபெறவுள்ளது. சிவஸ்ரீ சிவஸ்ரீ கு. வை. கனகசபாபதிக்குருக்கள் கும்பாபிஷேகத்தை நடாத்தி வைக்கவுள்ளனர்.

### சணல் கூட்டுத்தாபன நிர்வாகமாற்றம்

(கொழும்பு)

சணல்தொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவரும் நிர்வாக சபையும் நீக்கப்பட்டு புதிய நிர்வாக சபையொன்று உருவாக்கப்படுகின்றது.

# நகரசபை வழக்கு தள்ளுபடி!

[புலோலி]

கைத்தொழிற்பட்டறைத் தொழில் செய்துவந்த இருவர் பட்டறைக்கான வரி செலுத்தத் தவறினர்கள் என்று பருத்தித்துறை நகரசபையினால் தொடரப்பட்ட வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது.

பருத்தித்துறை மாதனையைச் சேர்ந்த எஸ். கனகசபை வி. பசுபதி ஆகிய இருவரும் நகரசபை எல்லைக்குள் கைத்தொழிற்பட்டறை வைத்திருந்து அதற்கான வரிப்பணத்தைச் செலுத்தத் தவறியதற்காகப் பருத்தித்துறை நகராளுமன்றம் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தது.

இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்காளிகள் தரப்பில் சட்டத்தரணி எட்வேட் சந்திரன் ஆஜராகி இருந்தார். ஆனால் பருத்தித்துறை நகரசபை சார்பில் எவரும் ஆஜராகி இருக்கவில்லை. இதனைத் தொடர்ந்து நீதவான் வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

# மக்கள் கருத்து

## 'அத்த' பத்திரிகை எடுத்துக் கூறியது

"தேசியப் பத்திரிகைகளும் ஈழநாடும்" என்ற தலைப்பில 'எஸ். எம். ஜி.' எழுதிய கட்டுரையில் ஒரு சக பத்திரிகை அலுவலகம் காடைத்தனத்தினால் தீக்கு காவு கொடுக்கப்பட்டதை தேசியப் பத்திரிகைகள் என்று சொல்லப்படுபவைகள் எப்படி மணலினுள் தீக்கோழி தலையைப் புதைத்துக்கொண்டு உலகத்தை அறியாது இருப்பதைப்போல இருக்கின்றன என்பதை விளக்கினார். படங்களும், செய்திகளும் தேசியப் பத்திரிகைகளில் வரவில்லையே என்று மனவேதனையைத் தெரிவித்திருந்தார். போலி தேசியப் பத்திரிகைகளுக்குமட்டுமே "எஸ். எம். ஜி." அவர்களது கண்டனம் உரித்தாக்கப்படவேண்டும்.

ஏனெனில் 'ஈழநாடு' உட்பட யாழ் நகரில் நடத்தப்பட்ட அநாகரிகச் செயல்களை சிங்கள மக்கள் மத்தியில் அம்பலமாக்கி இடித்துச் செய்த பெருமை சிங்கள மக்கள் மத்தியில் பரவலாக வாசிக்கப்படும் 'அத்த' பத்திரிகைக்கு உரியது. அவசரகாலச் சட்ட காலங்களில் யாழ்ப்பாணச் சம்பவங்கள், படங்களை வெளியிட்ட 'அத்த' தணிக்கைக்குள்ளாகி வெற்றிடங்களோடு வெளியாகியதை, சிங்களப் பத்திரிகைகளையும் வாசிப்போர் அறிந்திருப்பர். ஆசிரியத் தலையங்கமும், வேறு கட்டுரைகளும், உதாரணமாக 'சுரத்'தின் கட்டுரைகள் முக்கியமானவை- காரசாரமானவை-வெளியாகின.

அவசரகாலச் சட்டம் முடிவடைந்த பின்பு "ஈழநாடு" காரியாலயம் உட்பட பெருமளவு படங்களையும், செய்திகளையும் 'அத்த' வெளியிட்டது.

கம்யூனிஸ்ட் கட்சியால் வெளியிடப்படும் தினசரியான 'அத்த' ஒரு காலத்தில் கருப்புவாதச் செய்திகளை வெளியிட்டு தவறிப்போனதை அக்கறையுள்ள அரசியல்வாதிகள் வாசகர்கள் அறிவார்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் சுயவிமர்சன தவறிலிருந்து திருத்தலுக்குப்பின்பு தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுகின்ற நியாயமான நிலையை சிங்கள மக்களுக்கு எடுத்துச் சொல்லுகின்ற ஒரே பத்திரிகை 'அத்த' மட்டுமே என்று உள்ள நிலையில் "எஸ். எம். ஜி." 'அத்த' பற்றி ஒரு வரியிலாவது குறிப்பிட்டிருக்க முடியும். ஏனெனில் 'அத்த' படங்களையும், செய்திகளையும் வெளியிட்ட செய்தி சிறிய செய்தியாக ஈழநாட்டிலும் வெளிவந்திருக்கின்றது.

அத்துடன் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் இதழான 'சக்தி' ஆங்கில இதழான 'போர்வேட்' ஆகியனவும் 'ஈழநாடு' அலுவலகம் உட்பட பல படங்களையும் செய்தியும் வெளியிட்டதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

எஸ். கே. ஜோதிபால
பருத்தித்துறை.

# ஒருவரின் பெயரில் 300 'பாஸ்போட்'டுகள்!

[கொழும்பு]

நாட்டில் ஒருவர் பல கடவுச்சீட்டு (பாஸ்போட்டுகள்) வைத்திருப்பதாகவும் இவை சட்டவிரோத செயல்களுக்கும் குற்றச் செயல்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டுவருவதாகவும் கூறப்படுகிறது.

சிலர் பத்துக்கு மேற்பட்ட 'பாஸ்போட்டுக்கள்' வைத்திருப்பதாகவும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட இலாகா நடவடிக்கை எடுத்துவருவதாகவும் தெரியவருகிறது.

ஒருவருக்கு அவர் பெயரில் 300 பாஸ்போட்டுகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் ஒருவர் பாஸ்போட் எடுக்கும்போது அவர் முன்னர் பாஸ்போட் எடுத்துள்ளார் என்பதை பரிசீலனை செய்து கண்டுபிடிக்க முடியாதிருப்பதாகவும் குடியகல்வு, குடிவரவு இலாகா வட்டாரங்கள் தெரிவித்தன. [௪]

சர்வஜன வாக்குரிமை

# பொன்விழாவை யொட்டி கைதிகள் விடுதலை

[கொழும்பு]

சர்வஜன வாக்குரிமையின் பொன்விழாவையொட்டி இம்மாதம் 7ம் திகதி பெருந்தொகையான கைதிகள் விடுதலை செய்யப்படவிருக்கிறார்கள்.

கைதிகளில் சில பிரிவினர்களுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்குவதுபற்றி விரைவில் அறிவிக்கப்படவிருக்கிறது. ஒரு வருடத்திற்குக் குறைவான சிறைத்தண்டனை பெற்றவர்களுக்கு மன்னிப்புக் கிடைக்கும் எனக் கூறப்படுகிறது.

பயங்கரவாதம், கொள்ளை கற்பழிப்பு, கொலை போன்ற குற்றச்செயல்களுக்குத் தண்டனை பெற்றவர்களுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்படமாட்டாது. [௪]

ரயிலுக்கு நேரவிருந்த

# ஆபத்தைத் தவிர்த்தார் உதவிப்பொலிஸ் அதிபர்

[அம்பலாங்கொடை]

ரயில்பிரயாணிகளுக்கு ஏற்படவிருந்த உயிராபத்தை அம்பலாங்கொடை உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ஈ. பேரின்பநாயகமும், கான்ஸ்டபிள் பெரேராவும் சமயோசிதமாக தவிர்த்துக் காப்பாற்றியுள்ளனர்.

உதவிப் பொலிஸ் அதிபர் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் தமது கடமையின் நிமித்தம் சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டிருந்த சமயம் கரையோரத்திலுள்ள ஹபக்கட என்ற இடத்தில் விளக்குடன் இணைந்த மின்சாரக்கம்பி அறுந்து எரிந்துகொண்டிருப்பதைக் கண்டார். இன்னும் சற்றுநேரத்தில் சமுத்திராதேவி ரயில் வரவிருந்தது. மின்கம்பி அப்படியே இருந்தால் ரயிலில் மின்சாரம் பாய்ந்து பல பிரயாணிகளின் உயிருக்கும் ஆபத்து ஏற்படலாம். உதவிப் பொலிஸ் அதிபரும் அவரது காரைச் செலுத்திவந்த கான்ஸ்டபிளும் கடலிலிருந்து நீரை அள்ளிவந்து நெருப்பை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் மின்சாரக் கசிவு மோசமாகவே இருந்தது. உடனே மின்சாரசபையுடன் தொடர்புகொண்டு பிரதான மின்தொடர்பை நிறுத்தும்படி செய்தார் உதவிப் பொலிஸ் அதிபர்.

சற்றுநேரத்தில் வரவிருந்த சமுத்திராதேவி ரயிலையும் அவர் தொடர்புகொண்டு நிறுத்திவிட்டார்.

உதவிப்பொலிஸ் அதிபர் அச்சமயத்தில் அந்த இடத்திற்கு வராமலிருந்திருந்தால் விதிவிளக்கு ரயிலின்மீது விழுந்திருக்குமென்றும் அதனால் மின்சாரம் ரயிலில் பாய்ந்து ஆபத்து நேர்ந்திருக்குமென்றும் கூறப்பட்டது.

### சுதந்திரக்கட்சிக் கிளைகள்

[புலோலி]

பருத்தித்துறை நகரசபை எல்லைப் பகுதிக்குள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கிளைகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும் புலோலி கிராமாட்சி மன்ற எல்லைக்குள் கிளைகளைப் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சுதந்திரக்கட்சிப் பிரமுகர் திரு எஸ் ஞானப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

### மடுஉற்சவம் முடிவுற்றது

(மன்னார்)

மடுமாதா கோவில் வருடாந்த உற்சவம் முடிவுற்றது. யாழ். மறைஆயர் அதிவந். தியோகுப்பிள்ளை ஆண்டகை தமிழிலும் சிங்களத்திலும் திருப்பலிப் பூசை ஒப்புக் கொடுத்ததுடன் உற்சவம் முடிவுற்றது.

வழமைபோல் ஆயிரக்கணக்கான பக்தர்கள் உற்சவத்தில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

# "தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்குநிலைமை சீர்குலைவு"

## ராமமூர்த்தி கண்டனம்

சென்னை, ஜூலை, 3

"தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு நிலைமை சீர்குலைந்து வருகின்றதென்பதை அண்மையில் தமிழ்நாட்டிற்கு விஜயம் செய்த சீன வெளிநாட்டமைச்சரின் விஜயத்தின்போது இடம்பெற்ற சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன."

மேற்கண்டவாறு இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திரு. கே. ராமமூர்த்தி தமிழ்நாடு சட்டப்பேரவையில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் "வெளிநாட்டுத் தலைவரொருவரின் விஜயத்தின்போது பந்தோபஸ்து நடவடிக்கைகளை போதுமானளவில் எடுக்க தமிழ்நாடு அரசு தவறிவிட்டது." என்றார்.

சீன வெளிநாட்டமைச்சர் திரு. குவாங் குவா அண்மையில் தமிழ்நாட்டிற்கு விஜயம் செய்திருந்தபோது சென்னை விமான நிலையத்தில் அவருக்கெதிராக சில இளைஞர்கள் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திருந்தது தெரிந்ததே. (வெ)

## 'விசாரணைக் கமிஷன் வேண்டும்'

சென்னை, ஜூலை 3

விவசாயிகளுக்கு எதிராக தமிழ்நாடு அரசாங்கம் நடத்து கொலைவதை விசாரிக்க மத்திய அரசு கமிஷன் ஒன்றை நியமிக்க வேண்டுமென்று தமிழ்நாடு விவசாயிகள்சங்கத் தலைவர் திரு. ஜி. நாராயணசாமி நாயுடு கேட்டுள்ளார். [வெ]

## சீன - அமெரிக்க உறவு

மாஸ்கோ ஜூலை 3

"அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் அலக்ஸாந்தர் ஹெய்க் சீனாவுக்கு விஜயம் செய்தபொழுது, சர்வதேச விவகாரங்களில் சீனாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே உள்ள கருத்து ஒற்றுமை வலியுறுத்தப்பட்டது. சர்வதேசப் பதட்ட நிலைமையை மோசமாக்கவும், ஆயுதப் போட்டியை தீவிரப்படுத்தவும் அமெரிக்கா எடுக்கும் நடவடிக்கைகளை பீக்கிங் ஆதரிக்கிறது என்பதையே இது காட்டுகிறது" என்று 'டாஸ்' செய்தி கூறுகிறது.

ராணுவப்பலத்தைப் பெருக்க அமெரிக்க நிர்வாகம் எடுக்கும் நடவடிக்கைகளை சீனா உயர்த்தி மதிப்பிடுகிறது! பீக்கிங்கின் மேலாதிக்கவாத ஆக்கிரமிப்பு ஆசைகளுக்கு- குறிப்பாகத் தெற்கு, மற்றும் தென் கிழக்கு ஆசியாவில் அதன் அபிலாஷைகளுக்கு- வாஷிங்டன் ஊக்கம் அளிக்கிறது. சீனாவை 'நேச நாடாக'க் கருதும் ஜனாதிபதி ரீகனின் கொள்கையைச் செயல்படுத்தும்முறையில் சுமார் நூறு சட்டங்களை மாற்ற, அல்லது திருத்த அமெரிக்க நிர்வாகம் தொடங்கியுள்ளது. இவை சீனாவுக்கு அமெரிக்க வர்த்தகம் தொழில்நுட்ப உதவிகளைக் கட்டுப்படுத்தும் சட்டங்களாகும். இவை திருத்தப்படுவதன் விளைவாக நவீன அமெரிக்கத் தொழில் நுட்பங்களும் ஆயுதங்களும் இனி சீனாவுக்குக் கிடைக்கும். அமெரிக்க - சீன இராணுவ ஒத்துழைப்புக்கான ஒப்பந்தமானது, சீனாவின் அண்டை நாடுகளுக்கு மட்டுமன்றி, உலகத்தின் மற்றப் பகுதிகளிலும் நியாயமான கவலைக்கு இடமளித்துள்ளது என்று "டாஸ்" கூறுகிறது.

## வானொலியில் திருவூஞ்சல் பாடல்கள்

(சித்தன்கேணி)

சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தான திருவூஞ்சல் பாடல்கள் இம்மாதம் 6ம் திகதி திங்கட்கிழமை காலை 5-35 மணிமுதல் 6 மணிவரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்சேவை ஒன்றில் ஒலிபரப்பப்படுகிறது.

கடந்த மாதம் 29ம் திகதி ஆரம்பமான வருடாந்த உற்சவத்தை ஒட்டியே இந்த ஊஞ்சல் பாடல்கள் ஒலிபரப்பப்படுகின்றன.

இம்மாதம் 7-ம் திகதி ரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறுகிறது (இ)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் வெள்ளாந்தெரு ஸ்ரீ ஞான வைரவ சுவாமி கோவில் அலங்கார உற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 16 நாட்கள் நடைபெறவுள்ளது

## வட அயர்லாந்தின் அரசியல் பிரச்னைகளைத் தீர்க்க ஆலோசனைச்சபை!

லண்டன் ஜூலை 3

வட அயர்லாந்தில் இடம்பெற்றுவரும் அரசியல் பிரச்னைகளை தீர்த்து வைப்பதற்கு 1982ம் ஆண்டில் ஆலோசனைச் சபையொன்று நிறுவப்படுமென்று பிரிட்டன் தெரிவித்துள்ளது.

ஐம்பது பேரைக் கொண்ட இவ் ஆலோசனைச் சபையில் கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மதத்தலைவர்களும் இடம்பெறுவார்கள்.

வட அயர்லாந்தில் கடந்த பத்தாண்டுகளாக நிலவிவரும் அரசியல் பிரச்னைக்கு தீர்வு காண இச்சபை உதவுமென்று வட அயர்லாந்தின் அமைச்சரொருவர் தெரிவித்தார். இவ் ஆலோசனைச்சபைக்கு சட்டமியற்றும் அதிகாரமில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

இவ் ஆலோசனைச்சபையை அமைக்கும் பிரிட்டனின் திட்டத்தை வட அயர்லாந்தின் அரசியல்வாதிகள் எதிர்த்துள்ளனர்.

இந்த ஆலோசனை சபையை அமைக்கும் திட்டம்பற்றி தங்களுடன் கலந்து ஆலோசிக்க பிரிட்டன் தவறிவிட்டதென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

1962ம் ஆண்டு முதல் வட அயர்லாந்து பிரிட்டனின் ஆட்சியிலேயே இருந்து வருகிறது [இவ]

## சௌந்திராஜன் ராஜினாமா

சென்னை, ஜூலை 2

தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினரும் காந்திகாமராஜ் தேசிய காங்கிரஸ் தலைவருமான டாக்டர் கே. சௌந்திராஜன் அக்கட்சியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார்.

இவரின் ராஜினாமாவைத் தொடர்ந்து தமிழ்நாடு சட்டப்பேரவையில் காந்திகாமராஜ் தேசியகாங்கிரஸ் உறுப்பினர் தொகை ஐந்தாகக் குறைந்துள்ளது. [வெ]

## போலந்தில் பொருளாதார சீர்திருத்தங்கள்

வார்சோ ஜூலை 3

சோவியத் வெளிநாட்டமைச்சர் திரு. குரோமிக்கோ போலந்திற்கு விஜயம் செய்யும்போது அந்நாட்டில் பொருளாதார சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று போலந்து பாராளுமன்றத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

போலந்தில் கைத்தொழில் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது. தேசியவருமானமும் பதினைந்து சதவிகிதம் குறைந்துள்ளது.

போலந்திற்கு விஜயம் செய்யும் சோவியத் வெளிநாட்டமைச்சர் திரு. குரோமிக்கோ இங்குள்ள நிலைமைபற்றி தனது விஜயத்தின்போது ஆராய்ந்து சோசலிச தலைவர்களுக்கு விளக்கிக் கூறவுள்ளார்.. (வெ)

## யாழ். அபிவிருத்தி சபைத் தேர்தலில் பெரும் மோசடிகள்!

### யாழ். மேயர் குற்றச்சாட்டு

[யாழ்ப்பாணம்]

"இலங்கை அரசு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும், சர்வஜன வாக்குரிமையின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழாவை பொன்விழாவாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. 81ம் ஆண்டு முழுவதையுமே மேற்படிக்கொண்டாட்டத்திற்கு ஒதுக்கியுள்ளது. சர்வஜன வாக்குரிமையான பொன் விழாவைக் கொண்டாடும் அதேவருடத்தில் 50 ஆண்டுகால தேர்தல் வரலாற்றில் முன்எப்பொழுதும் சம்பவித்திராத பெரும் தேர்தல் மோசடிகள் யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தலின் போது நடந்துள்ளது.

யாழ். மாநகரசபை மாதாந்தக்கூட்டத்திலே, யாழ் மாவட்டசபை தேர்தல் மோசடிகள் பற்றி விசாரணை செய்ய சர்வதேச ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு கோரி யாழ். முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் கொண்டுவந்த தீர்மானம் தொடர்பாக அவர் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி சம்பவம் ஒரு வரலாற்று நிகழ்ச்சி நடைபெறும் கால கட்டத்தில் நடந்திருக்கிறது என்பது மட்டுமல்ல அது ஒரு வரலாற்றுச் சம்பவமாகவும் அமைந்துள்ளது. தேர்தல்களில் தலையீடு நடைபெற்றிருக்கிறது. வாக்குப் பெட்டிகள் ஆறு மாயமாக மறைந்துள்ளன. தேர்தல் நிலையங்களில் குறிக்கப்பட்ட நேரங்களில் தேர்தல்கள் ஆரம்பமாகவில்லை. சில இடங்களில் குறித்துரைக்கப்பட்ட நேரத்துக்கு முன்னதாகவே வாக்குப் பெட்டிகள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. இத்தீவின் ஐம்பது ஆண்டுகால தேர்தல் வரலாற்றில் தேர்தல் பெட்டி ஒன்றாவது மாயமாக மறைந்தமைக்கு சான்றோ முன்னுதாரணமோ இடையாது தேர்தலின்போது வாக்களிப்பு ஆரம்பமான நேரம் முதல் தேர்தலுக்குப் பொறுப்பான அதிகாரியிடம் வாக்குப் பெட்டிகள் ஒப்படைக்கும் வரை அவற்றிற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களது பார்வையைவிட்டு அகலாது பாதுகாக்கப்பட்டவரலாற்றையுடையது இத்தீவு.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அபிவிருத்திச் சபைத் தேர்தலைப் பொறுத்தமட்டில் தேர்தல்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடம் வாக்களிப்பு நிலையங்களில் இருந்து எடுத்துச்செல்லப்பட்ட வாக்குப் பெட்டிகள் இடை நடுவே பாதைமாறி வேறிடங்களுக்குக்கொண்டு போகப்பட்டுள்ளன. இதற்கு வசதியாகவே தேர்தல் சட்டத்தின்படி வாக்களிப்பு நிலையங்களிலேயே நடைபெற்றிருக்க வேண்டிய வாக்குக்கணிப்பு சம்பந்தப்பட்ட வாக்குப் பெட்டிகளைப் பொறுத்தமட்டில் அங்கு நடைபெறவில்லை வாக்குப் பெட்டிகள் முத்திரையிடப்படாதவே எடுத்துச் செல்லப்பட்டுள்ளன இவையாவும் பெரும் மோசடி நடைபெற்றிருப்பதையே எடுத்துக் காட்டுகிறது இவற்றிற்கு வசதியாக தேர்தல் ஆரம்பமாகும் போது, அதற்கென நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரிகள் நீக்கப்பட்டு, ஆளுங்கட்சியின் ஆதரவாளர்களால் பதிலிடப்பட்டுள்ளனர் தேர்தல் சட்டதிட்டங்கள் வேண்டுமென்றே மீறப்பட்டுள்ளன இவை யாவும் இத்தீவின் ஐம்பதாண்டு தேர்தல் வரலாற்றில் முன் எப்பொழுதும் நிகழாத சம்பவங்கள் எதிர்வரும் பாராளுமன்ற ஜனாதிபதி தேர்தல்களில் கச்சிதமாகவும் விரிவாகவும் நிகழ்த்தத்திட்டமிடப்பட்டிருக்கக்கூடிய பெரும் தேர்தல் மோசடிகளுக்கான நிரல்படுத்தப்பட்ட வெறும் ஒத்திகையே இது எனவேதான் எதிர்காலத் தேர்தல் மோசடிகள் தவிர்க்கப்படும்படியாக விசாரணை சர்வதேச மட்டத்தில் வலியுறுத்தப்படுகிறது (க)

## இன்றைய பலன்

ஆனி மாதம் 20ம் திகதி
சனிக்கிழமை
(4-7-81)

மேடம்: வாகனச் சொந்தக்காரர்களுக்கு வருமானம் பெருகும் ஆசிரியர்களாயின் அவர்கள் பணி சிறப்பாக இருக்கும் சிலருக்கு ஆராய்ச்சிகளுக்கும் ஆர்வம் பிறக்கும். பொன்னான தினம்.

இடபம்: பொதுமக்கள் மத்தியில் மதிப்பு உயரும் தங்கள் செல்வாக்கில் பிள்ளைகளுக்கும் பெரும் பங்குண்டு ஆதரவுக்கு இடமுண்டு நன்னாள்.

மிதுனம்: முன்னேற்றப் பாதையில் தடைகள் பல தாக்கும் இருள் படர்ந்த சம்பவம் ஒன்று மீண்டும் நினைவுக்கு வந்து வேதனைதரும் கடமையில் கவனம் செலுத்தவும்;

கடகம்: குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை தென்படும் காதல்வானில் சஞ்சரிப்பவர்களுக்கு கனிவான தினம் களஸ்திரவழியாலும் நன்மைகளுக்கு இடமுண்டு.

சிங்கம்: தானியத்துறையில் நஷ்டத்திற்கு இடமுண்டு. விவசாயிகள் பாதிக்கப்படுவர் அதிக சிந்தனையின் மூலம் உடல் நலமும் பாதிக்கப்படலாம்.

கன்னி; சிலர் வாழ்க்கையில் திடீர் வரவுக்கும் இடமுண்டு. தொழில்புரியும் இடத்தில் சக ஊழியர்களின் ஆதரவைப் பெறுவர் நண்பர்கள் மூலம் மகிழ்ச்சியுண்டு.

துலாம்: சிலர் வாழ்க்கையில் அதிகாரப் பேச்சுக்கு இடமுண்டு. புதுமனை கட்டுவதற்கு சிலர் ஆலோசிக்கலாம் உற்சாகமாகக் கடமையாற்றுவீர்கள்.

விருட்சிகம்: வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பலவழிகளிலும் முயற்சி செய்வீர்கள் புதுமையான செய்திக்கும் இடமுண்டு. புதிய தொழில்துறையொன்றில் வாய்ப்புக்கிடைக்கும். முன்னேற்றத்திற்கு இடமுண்டு.

தனு: வேண்டாத உறவுகளைத் துண்டித்தல் நன்று வெளியிடத்துப் பயணம் வேதனையைத்தரலாம். பெரியோர்களைப் பகைத்துக் கொள்ளாது. பொறுமையைப்பேணி நடக்கவும்.

மகரம்: முகமன் பேசிக்கொண்டே உங்கள் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு எதிரிகள் முயற்சி செய்வர் கணவ' மனைவி உறவு முறை பூசல் நிறைந்ததாக இருக்கும் பொறுமை விரும்பத்தக்கது.

கும்பம்: முன்னாள் ஆசிரியர் ஒருவர் உமது முன்னேற்றத்துக்கு வழி காட்டுவார். அடக்கமான நடவடிக்கையின் மூலம் மற்றவர்களின் மனதைக் கவருவீர்கள் இறை நம்பிக்கை மேலோங்கும்.

மீனம்: மனக்கவலைக்கு இடமளிக்கும் சுறுசுறுப்புக் குன்றும் கொள்கையில் கோணலுடன் கோபமும் உண்டாகும் அமைதி நன்று

சோதிடகலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## தந்தை கண்டித்தார் மகன் தற்கொலை

[பூலோலி]

கல்லூரிக்கு ஒழுங்காகச் செல்லாததால் தந்தையின் கண்டனத்திற்கு உள்ளான மைந்தன் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார். கரவெட்டியைச் சேர்ந்த முருகேசு பஞ்சலிங்கம் [வயது 20] என்பவரே தற்கொலை செய்துகொண்டவராவர்.

இவரது மரண விசாரணையின்போது சாட்சியமளித்த தந்தை கந்தப்பர் முருகேசு கூறியதாவது:

"இறந்த எனது மகன் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் உயர் வகுப்பில் கல்வி கற்றுவந்தார் இவர் ஒழுங்காக கல்லூரிக்குப் போவதில்லை என்றும், சில நண்பர்

5-ம் பக்கம் பார்க்க)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
அரசிளங்குமரி

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
எங்க பாட்டன் சொத்து

வெலிங்டன் (யாழ்நகர்)
10 30, 2-30 6-00, 9-30
ரஜனிகாந்த் - லதா
ஆயிரம் ஜென்மங்கள்

லிடோ யாழ். நகர்
10-30, 2-30, 6-00, 9-30
அழியாத கோலங்கள்
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

தினசரி 4 காட்சிகள்
வின்சர் (யாழ்ப்பாணம்)
ஜெமினி, பத்மினி, ஜெயலலிதா, சுருளிராஜன், எஸ். வி. சுப்பையா
ஆதி பராசக்தி
(கலர்—புதிய பிரதி)

6-வது ஜனத்திரள் வாரம்!
சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி, விஜயா
தர்மராஜா (கலர்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) கடைசி வாரம்
தினசரி 10-30, 2-00, 6-00 9-30
★ சிவாஜி ★ ஜெமினிகணேஷ் ★ ஸ்ரீதேவி
★ விஜயலதா ★ சுந்தரராஜன் ★ சௌகார்ஜானகி
சட்டாக்கத்தி பைரவன்
(வண்ணப்படம்)

மனோகரா தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
(யாழ்ப்பாணம்)
சிவாஜி - மாலினி பொன்சேகா - ஸ்ரீதேவி நடித்த
பைலட் பிரேம்நாத்
10-7-81 முதல்
ஒரு கை ஓசை

புரட்சி நடிகரை திரையில் காணத்துடிக்கும் எம். ஜி. ஆர். ரசிகர்களின் ஆவலைப் பூர்த்திசெய்ய இதோ!
ராணி 10-30, 2-15, 6-00, 9-30
(யாழ்.நகர்)
எம் ஜி ஆர். ஜெயலலிதா
எங்கள் தங்கம்
[புத்தம் புதிய பிரதி—கலர்]

RAJAH Jaffna Daily 10-30, 2-00, 4-30 7-00 and 9-30



Bruce Lee Fighting his way to fame with his New Martial Arts

Golden Harvest's Presentation of the year

It tells the struggle of an overseas Chinese Leader

BRUCE LEE MARIAYI

Thailand's leading Actress MALARIN

THE BIG BOSS
(Scope and Color)
Adults only வயதுவந்தவர்களுக்கு மட்டும்


# "சிங்கன் வந்துவிட்டான் வெட்டடா என்று முதல் எதிரி கத்தினுர்"

## சிங்கராசா கொலை வழக்கில் சாட்சியம்

(நமது புலோலி நிருபர்)

"2-ம் எதிரி ஜெயராசா 1-ம் எதிரி ஸ்ரீஸ்கந்தராசாவைப் பார்த்து" சிங்கன் வந்துவிட்டான் வெட்டடா என்று கத்திச் சொன்ன போது இறந்தவர் பயத்தினால் ஒழுங்கையினூடாக ஓடினார்.

இவ்வாறு இமையாணன் சின்னத்துரை சிங்கராசா கொலைவழக்கு விசாரணையில் சாட்சியமளித்த கொலையுண்டவரின் சகோதரனான சின்னத்துரை கனகராசா [வயது 39) குறிப்பிட்டார்.

1980 நவம்பர் மாதம் 6-ம் திகதி உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த சின்னத்துரை சிங்கராசாவை வெட்டிக் கொலை செய்ததாக வல்வெட்டித்துறைப் பொலிசார் வல்வெட்டியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை ஸ்ரீஸ்கந்தராசா வைரமுத்து ஜெயராசா கார்த்திகேசு இரத்தினவேலு ஆகியோர் மீது குற்றஞ் சாட்டி வழக்குத்தாக்கல் செய்திருந்தனர் இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு கே எஸ் மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது தொடர்ந்து சாட்சியமளித்த கனகராசா குறிப்பிட்டதாவது

"1980-ம் ஆண்டு நவம்பர் மாதம் 6-ம் திகதி இந்தச்சம்பவம் நடந்த நாள் எனக்கு நல்ல ஞாபகமுண்டு அன்று தீபாவளித்தினமாகும். அன்று பிற்பகல் 6 மணியளவில் நான் எனது வீட்டிலிருந்தேன் அந்த நேரத்தில் எனது தம்பி சிங்கராசாவும் அவருடைய மனைவி சூரியசாந்தியும் எனது வீட்டிற்கு வந்தார்கள் இறந்தவர் எனது தம்பி அன்று இரவு நான் ராஜா கடையில் சாமான் வாங்க தம்பி சிங்ராசா ரஜனி பீடாக்கடைக்குச் சென்றோ? இக்கடைகள் எல்லாம் வதிரி வீதியிலேயே இருக்கின்றன அப்பொழுது 1-ம் எதிரி என்னைப்பார்த்து நீ ஒரு சண்டியனா? நான செந்த சண்டித்தனம் உனக்குத் தெரியுமா? என்று கூறி என்னுடைய தோளில் கரண்டி எனது இடது பக்கத் தாடையில் வெட்டினார் பின்னர் எனக்கு நெஞ்சிலும் வெட்டினார் 1-ம் எதிரி எனக்கு வெட்டும் போது 2-ம் எதிரியும் பக்கத்கில் நின்றார் வெட்டுவிழுந்த பின்னர் வெட்டு விழுந்த எனது தாடையை பிடித்துக்கொண்டு அழுது கொண்டிருந்தேன் அப்போது எனது 5-வது தம்பி ரவீந்திரன் வந்து எனக்கு உதவிசெய்தார்

"எனக்கு வெட்டு விழுந்த பின் சொந்தக்காரர் ராஜா எனக்கருகில் வரவில்லை இராசேந்திரம் அவ்விடத்திற்கு எப்படி வந்தாரென்பது எனக்குத் தெரியாது எனக்கு வெட்டு விழுந்த பின்னர் இறந்தவரான எனது தம்பி சிங்கராசா அவ்விடம் வந்து என்ன நடந்ததென என்னிடம் கேட்டார் 1-ம் எதிரி பாலசீவும் கத்தியால் வெட்டிவிட்டார் என்று நான் சொன்னேன் பின்னர் 2-ம் எதிரி ஜெயராசா 1-ம் எதிரியைப் பார்த்து "சிங்கன் வந்துவிட்டான் வெட்டடா" என்று சொன்னார் இறந்தவராகிய சிங்கராசா உடனே பயத்தினால் பக்கத்திலிருந்த ஒழுங்கையினூடாக ஓடினார் அதன் பின்பு என்ன நடந்ததென எனக்குத் தெரியாது இறந்தவரான சிங்கராசா அப்படி ஓடும்போது 1-ம் எதிரி மூன்றாவதும் 2-ம் எதிரி அவரைத் தொடர்ந்தும் துரத்திக் கொண்டு ஓடினார்கள் அதன் பின்னர் ராஜா கடையின் முன் படியில் நான் அப்படியே சரிந்துவிட்டேன் என்னை மந்திகை ஆஸ்பத்திரிக்கு கொண்டுசென்றது மட்டும் எனக்குத் தெரியும்

மயக்கம் தெளிந்து நான் பார்த்தபோதுயாழ் பெரியாஸ்பத்திரியில் இருந்ததை உணர்ந்தேன் நான் 14 நாட்கள் வைத்திய சாலையில் இருந்தேன் [விசாரணை தொடர்ந்து நடக்கிறது]

# "உலகவங்கியிடம் கேட்டது என்ன? 'அமிர்' நாடு திரும்பிய பின்னரே தெரியவரும்"

[யாழ்ப்பாணம்]

மலேசியா எம். பி திரு. ஏ. பொன்னையாவை, கடந்த மாதம் 29ம் தேதி நண்பகல் யாழ் முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் சந்தித்து பேசியது பற்றி இம்மாதம் 1ம் தேதி "ஈழநாடு" இதழில் வெளியான செய்தியில் சிறு தவறு ஏற்பட்டிருப்பதாக யாழ்முதல்வர் தெரிவித்திருக்கிறார்.

முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் 'ஈழநாடு' பத்திரிகைக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது: "மாவட்ட அபிவிருத்தி சபைகள் வெளிநாடுகளிடம் நிதிஉதவியை நேரடியாகப்பெற முடியுமென்றும், அதனால்தான் தலைவர் திரு. அ அமிர்தலிங்கம், உலகவங்கியிடம் யாழ் மாவட்டசபைக்கு நிதிஉதவி கேட்டிருந்தார் என்றும் முதல்வர் தெரிவித்தார் எனச் செய்தியில் காணப்படுவதை ஆட்சேபிக்கின்றோம்.

"மேற்படி கூற்றில் நேரடியாக" என்று நாம் கூறவில்லை. அதுபோலவே யாழ் மாவட்ட சபைக்கு நிதி உதவி கேட்டிருந்தால் என்பதும் எம்மால் மறுக்கப்படுகிறது சென்னை இந்து வெளியிட்டிருக்கும் செய்தியின்படி வடக்கு கிழக்கு மாகாணங்களை சேர்ந்த மாவட்ட அபிவிருத்திசபைகளுக்கு நிதிஉதவி கோரப்பட்டதாகவே எழுதப்பட்டுள்ளது கூட்டணி செயலதிபர் திரு. அமிர்தலிங்கம், உலகவங்கியிடம் விடுத்த வேண்டுகோள் என்ன என்பது உத்தியோகபூர்வமாக அவர் நாடு திரும்பியபின்பே தெரியவரும். [ஈ]

## இல்லப் போட்டி

(அரியாலை)

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியின் இல்லங்களுக்கிடையிலான வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இம்மாதம் 11ந் திகதி கல்லூரி அதிபர் திரு. செ. ஈ. ஆனந்தராசா தலைமையில் நடைபெறவிருக்கிறது. பிரதம அதிதியாக யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலை சிறுவர் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி அருளானந்தம் கலந்துகொள்வார்கள். திருமதி அருளானந்தம் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான விருதுகளை வழங்குவார்.

யாழ்ப்பாணணம் புனிதர் சம்பத்திரிசியார் கல்லூரியின் இல்லங்களுக்கிடையிலான வருடாந்த மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது. இப்போட்டிக்கு பிரதம அதிதியாக யாழ்ப்பாணம் எம். பி. திரு வெ யோகேஸ்வரன் கலந்துகொள்வார்.

## தந்தை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களுடன் கூடி தீய பழக்கங்கள் பழகுவதாகவும் கேள்விப்பட்டோம் ஒழுங்காகக் கல்லூரிக்குப் போகவேண்டுமெனவும் நான் கண்டித்தேன் சகோதரர்களும் கண்டித்தார்கள் இதனால் இறந்தவர் மனக்கவலையடைந்து காணப்பட்டார் நாங்கள் கண்டித்த தனாலேயே இவர் கவலையடைந்து சுருக்கிட்டு இறந்திருக்கலாம்"

பருத்தித்துறைப் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர் விசாரணையை மேற்கொண்ட திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு பீ குமாரசாமி தற்கொலை என்று தீர்ப்பளித்தார்

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேகம் இம்மாதம் 8ம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது

## கல்லூரித் தினவிழா

[பண்டத்தரிப்பு]

மானிப்பாய் இந்துக்கல்லூரி தின விழாவும், இல்ல மெய்வல்லுனர் போட்டியும் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது பிரதம அதிதியாக திரு கே சோமசுந்தரம் கலந்துகொள்வார் திருமதி கே சோமசுந்தரம் பரிசில்களை வழங்குவார் (இ)

## புனித நோன்புக்கு உணவுவகைகள்

(யாழ்ப்பாணம்]

இன்று தொடக்கம் ஆகஸ்ட் மாதம் 11-ம் திகதிவரை யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள், தங்களின் புனித நோன்பை நோற்பதற்காக உத்தரவு பெற்ற வியாபாரிகள் பல நோக்கு கூட்டுறவு சங்கம் மூலமாக குத்தரிசி, சவ்வரிசி, மைசூர்ப்பருப்பு டின்மீன் ஈச்சம்பழம் முதலியன வழங்கும்படி யாழ்ப்பாண கச்சேரி உயர் அதிகாரிகளையும் உணவு அதிகாரிகளையும் யாழ் முஸ்லிம் சமூக சேவா சங்கத்தின் காரியதரிசி ஜனாப் எம்.ஈஷ ஹாஷிம் பேட்டிகண்டும் மகஜர்கள் சமர்ப்பித்ததன் காரணத்தினால் ஆவன செய்வதாக அதிகாரி தெரிவித்துள்ளார். (மா)


ஹரன் [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு சுஜாதா
சென்ற ஆண்டு சிறந்த நடிகை
சரிதா
நடித்த
சென்ற ஆண்டின் சிறந்த டைரக்டர்
K. பாலச்சந்தரின்
நூல் வேலி
[கலர்]

# உணர்வுகள் எரிவதில்லை! [2]

'பேனு' எழுதுவது

அடுத்தநாள் ஜூன் 2ம் திகதி வழமைபோல் பஸ்ஸிற்காக காத்து நின்றேன்.

''உங்கள் ஈழநாட்டையும் எரித்து விட்டார்களாம்.''

ஒருவர் ஓடிவந்து கூறினர். மனம் துணுக்குற்றாலும் 'இருக்காது' என்றே நினைத்தேன். ''அப்படி ஏதும் நடந்திருந்தாலும் முன் பக்கமாக கதவை அல்லது ஜன்னலை உடைத்திருப்பார்கள்'' எரித்திருப்பார்கள்''மனதுக்குள்என்று சொல்லிக்கொண்டேன்.

பஸ் யாழ் நகரை அடைந்தது. வீதிகளில் சனங்கள் வழக்கத்தைவிட அதிகமாகக்காணப்பட்டனர். ஐந்து சந்தியில் இறங்கி வழமைபோல் நடந்தேன்.

### மக்கள் கூட்டம்

ஈழநாடு காரியாலயத்தின் முன் சனக்கூட்டம். எம். ஜி. ஆர். சுடப்பட்ட அன்று காலையில் - தமிழ்நாடுதேர்தல்முடிவு வெளியானதினத்தில் - தமிழ்த் தலைவர்கள் கைதானபோது - எல்லாம் இவ்வாறு ஈழநாடு காரியாலத்தில் செய்தி அறியவும் பத்திரிகை வாங்கவும் சனக்கூட்டம் திரண்டு நிற்பதைப் பார்த்திருக்கிறேன்.

ஆனல் இன்று......?

வேடிக்கை பார்க்க திரண்டவர்கள்ஒருபகுதி - கிடைத்தால் எதையாவது எடுத்துச் சென்று விடுவதற்காக வந்தவர்கள் சிலர். - 'ஈழநாடு' எரிக்கப்பட்

## மக்கள் கூட்டம் திரண்டது ஏன்?

டதையறிந்து ஆத்திரமும் அங்கலாய்ப்பும் கொண்டவர்களே பெரும்பாலானவர்கள்!

'கேட், டைத் திறந்து கொண்டு வளவுக்குள் செல்கிறேன்.

என்ன அலங்கோலம்!

### மனம் அழுதது

முற்றத்தில் ஊழியர்களின் சைக்கிள்கள் கும்பலாகப் போட்டு எரிக்கப்பட்ட நிலையில் கிடக்கின்றன. கட்டிடத்திற்குள்ளிருந்து இன்னமும் புகையுடன் அனல்காற்று வீசிக்கொண்டிருக்கின்றது. கவலை தோய்ந்த முகங்களுடன் ஊழியர்கள் - மகான், சபா, பாலசிங்கம், பாக்கியநாதன், சிவனேசன், மார்க்கஸ், ஜோசப் இப்படி எல்லாரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள்,

என் மனம் அழுகிறது. வாயில் வார்த்தைகள் வர மறுக்கின்றன. கண்கள் கலங்குகின்றன. திரைக்கட்டி நிற்கும் கண்களில் 'ஈழநாடு' ஸ்தாபனத்தை வளர்த்தவர்களில் பலரைக் காண்கிறேன்

அமரர் டாக்டர் சண்முகரத்தினம் புன்னகை தவழும் முகத்தோடு இந்த ஸ்தாபத்தின் படிகளில் ஏறி இறங்கி நடந்து திரிந்த அந்த நாட்கள்.!

இரவு என்றும் பகலென்றும் பாராமல் 'ஈழநாடு' வளர்ச்சிக்கான அவர் ஆற்றிய பணிகள்!

ஆசிரியர்திரு. கே. பி. ஹரன் நிர்வாகி பாமர் - ஆலோசகர் தம்பர் மாஸ்டர் - போர்மன் நாராயணசாமி இப்படி பழைய முகங்கள் எல்லாம் என் மனத்திரையில் வந்துபோகிறார்கள்.

வரலாற்றில் ஹிட்லர் கூட செய்யத்துணியாத ஒரு காரியத்தை ஒரு ஜனநாயக நாட்டின் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் செய்வார்கள் என்று அப்பெருமக்கள் எல்லாம் எண்ணிக்கூட பார்த்திருக்கமாட்டார்களே!

### சரித்திரமே பஸ்மீகரம்

கட்டிடத்தின் முன்புறமுள்ள களஞ்சிய அறைகளை எட்டிப் பார்க்கிறேன். ஈழநாடு சரித்திரமே பஸ்மீகரமாகிவிட்ட காட்சி. சேமித்துவைக்கப்பட்டிருந்த 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் பெறுதியான அச்சடிக்கும் தாள்கள், பழைய பத்திரிகை பிரதிக்கட்டுகள். தஸ்தாவேஜுகள் ஆவணங்கள், பதிவேடுகள், புதிய எழுத்துக்கள், பாதுகாப்புக்காக விடப்பட்டிருந்த சைக்கிள்கள் யாவும் பொடி சாம்பலாகிக்கிடந்தன.

இன்னும் உள்ளே செல்கிறேன். 'ஈழநாடு' பத்திரிகை உயிருடன் வெளிவருதற்கு உறுதுணையாகவிருந்த யந்திரங்கள் எரிந்து கிடக்கின்றன. லொறி டயர்களை யந்திரங்களுக்குகீழே போட்டு எரித்திருக்கிறார்கள். எழுத்துக்கள் இருக்கும் கேஸ்கள் எல்லாம் கீழே விழுத்தப்பட்டுக்கிடக்கின்றன.

மூன்றாவது யந்திரம் கொஞ்சம் தப்பிப்பிழைத்திருக்கிறது பக்கத்து வீட்டு வைத்தியர் சோமசுந்தரமும் அருகாமையிலுள்ள இளம் அன்பர்களும் சேர்ந்து தீயை அணைக்க முயன்றிருக்கிறார்கள். அதனுல் அது ஓரளவு தப்பியிருக்கிறது.

### வாள் இரும்புக்கம்பி...

வாள் ஒன்றை தூக்கிக்காட்டுகிறார் ஊழியர் ஒருவர். இரும்புக்கம்பி ஒன்றை எடுத்துக் காட்டுகிறார் இன்னெருவர்.

காடையர்கள் விட்டுச் சென்ற ஆயுதங்கள் அவை. [இந்தவாள் விசாரணைக்குவந்த உயர்மட்ட பொலிஸ் குழுவைச் சார்ந்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.]

### காரணம் என்ன?

ஏன் இப்படிச்செய்தார்கள்! எதற்காக இப்படிச் செய்தார்கள்!!

என்மனம் சிந்தனையிலேயே ஆழ்கிறது.

முதல் நாள் யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவங்களை விபரமாக அடுத்தநாள் வெளியிடுவதாக அறிவித்திருந்தோம். அதனுல்தான் எரித்திருக்கிறார்கள் என்று ஒருவர் காரணம் கூறினார்.

'ஈழநாடு' என்ற பெயர் பிடிக்கவில்லை. இது தமிழர் விடுதலைக்கூட்டணி கோரும் தமிழ் ஈழத்தை நினைவுறுத்துகிறது. அதனுல்தான் எரிந்திருக்கிறார்கள் என்றார் இன்னொருவர்.

தேர்தல் காலத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கே பத்திரிகையில் அதிக இடம்கொடுக்கப்பட்டுவிட்டது. அதனுல் தான் எரித்திருக்கிறார்கள் என்பது இன்னொருவர் கூற்று.

தமிழர் சமுதாயத்தின் நாகரிக பண்பாட்டுச் சாதனங்கள் அனைத்தையும் அழித்துவிட வேண்டுமென்று திட்டமிட்டுக் கொண்டுவந்து தான் இப்படி செய்திருக்கிறார்கள் என்பது வேறொருவர் கருத்து.

கொழும்புக்கு வெளியிலிருந்து வெளிவரும் ஒரே ஒரு மாகாண தினசரி பத்திரிகை-அதுவும் தமிழ்ப்பத்திரிகை. அது தான் காரணம் இப்படி ஒருவர்

இன்னும் எத்தனையோ விதமான காரணங்களும் தெரிவிக்கப்படுகின்றன.

இதில் எது உண்மை!

### மக்கள் கருத்து

மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கான தேர்தல் காலத்தில் எவ்வளவு தூரம் பாரபட்சமின்றி செய்திகளைப் பிரசுரிக்க முடியுமோ அந்த அளவுக்கு நியாயமாகவே நடந்து கொண்டோம். இதனை எல்லா கட்சிகளுமே ஏற்றுக்கொண்டுள்ளன.

இலங்கை ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ த அல்விஸ் அண்மையில் கொழும்பில் நடந்த ஆசிய நாடுகளின் பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்ட ஒரு கருத்து எமது நிலைமையைச் சரியாக வலியுறுத்துவதாக இருக்கின்றது.

''நீங்கள் ஒவ்வொருவரும் 'நியுயோர்க் டைம்ஸ்' பத்திரிகையின் ஆசிரியர் என்று நினைத்துக் கொள்ளுங்கள். அந்தப்பத்திரிகையில் இங்கு நடக்கும் இந்த மகாநாட்டைப் பற்றி முதல் பக்கத்தில் தலைப்புச் செய்தியொன்று போடுவீர்களா? போடமாட்டீர்கள். ஏனென்றால் அந்தப் பத்திரிகையின் வாசகர்களாகிய மக்கள் அதனை விரும்பமாட்டார்கள்'' இவ்வாறு கூறினார் அமைச்சர்.

அதேபோல், தமிழ்மக்கள் மத்தியிலிருந்து வெளிவரும் ஒரு பத்திரிகை அந்த மக்களில் பெரும்பான்மையானவர்களின் கருத்தைப் பிரதிபலிக்கும் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் விடமுடியுமா? அவ்வாறு செய்யின் அதனை மக்கள் விரும்புவார்களா? இல்லை.

### அரசியல் சிக்கலுக்குள் மாட்டாமல்...

என்றுலும் அரசியல் சிக்கலில் மாட்டிக் கொள்ளாமல் மக்களுக்குத் தேவையென்று நாம் கருதும் யோசனைகளை எமது தலையங்கங்கள் மூலமும் வேறுவழிகளிலும் வலியுறுத்துவதற்குத் தவறியதில்லை-தயங்கியதுமில்லை. தொடர்ந்து படித்து வருபவர்கள் இதனை உணர்வார்கள். அத்துடன் தமிழ் மக்கள் மத்தியிலுள்ள சிறுபான்மையான அரசியல் கருத்துக்களுக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கும் போதிய இடம் கொடுத்துப்பிரசுரிப்பதில் நாம் பின்நின்றதில்லை.

அண்மையில் பிரதமமந்திரி திரு. ஆர். பிரேமதாசா வடபகுதிக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது ''ஈழநாடு'' முழு அளவில் அரைது நடவடிக்கைக்கு இடம் கொடுத்து விமர்சனங்களும் வெளியிட்டதை வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

எனவே எம்மைப் பொறுத்தவரை எந்த ஒரு கட்சிக்கோ தனிப்பட்டவர்களுக்கோ அவசியமற்றவிதத்தில் முக்கியத்துவம் கொடுப்பதென்ற நிலைக்கு இடமில்லை, ஆனுல் தெரிந்தோ தெரியாமலோ தவறுகள் இடம்பெறக்கூடும்- பனித சக்திக்கு அப்பாற்பட்ட விடயம் அது.

[நாளை தொடரும்]

## இன்று

[காங்கேசன்துறை]

காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் நடைபெறுகிறது. பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. சு. நடராசா கலந்து கொள்வார். காங்கேசன்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம் விசேட அதிதியாக கலந்து கொள்வார்.

## நயினை உற்சவம்

[வேலணை]

நயினுதீவு நாகபூஷணி அம்மன் ஆலய உற்சவம் நேற்று பகல் 12-10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாயிற்று.

இம்முறை படகு சேவைகள் திறம்பட நடைபெற்றதாலும் யாத்திரீகர்களின் வசதிக்கான ஏற்பாடுகள் நல்ல முறையில் செய்யப் பட்டிருந்தமையாலும் முதல்நாளே ஏராளமான பக்தர்கள் காணப்பட்டனர்.

யாத்திரீகர்களின் நன்மை கருதி உதவி அரசாங்க அதிபர் காரியாலயம், தற்காலிக நீதி மன்றம், சுகாதார நிலையம் பொலிஸ் காரியாலயம் முதலியவை முன்கூட்டியே நிறுவப் பட்டுள்ளன.

யாத்திரீகர்களின் வசதிக்கான ஏற்பாடுகளை உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. சிவநாயகம் கவனித்து வருகிறார்.

பிரயாணிகளிடம் படகு சேவையாளர்கள் அதிக கட்டணங்கள் அறவிடாமலும் சாமான் ஏற்றும் படகுகளில் பிரயாணிகளை ஏற்றுமலும் அதிகப் பிரயாணிகளைப்படகுகளில் ஏற்றுமலும் இருக்கும் விதத்தில் உதவி அரசாங்க அதிபர் ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

## 'தைமூர்' நாடகம்

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை சனேர் வட்டத்தினுல் 'தைமூர்' என்னும் நாடகம் இன்று சனிக்கிழமை மெதடிஸ்ற் பெண்கள் கல்லூரியில், பருத்தித்துறை லயன்ஸ் கழக நிதிக்காக, நடைபெறவிருக்கின்றது.

இந் நாடகம் சென்றமாதம் மேடையேற இருந்தது. ஆனுல் பருத்தித்துறை லயன்ஸ் கழகத்தினரின் இலவச கண் வைத்திய சேவையின் காரணமாக பின்போடப்பட்டது.

## தீக்கிரையான...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நடைபெருத மிலேச்சத்தனமான சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளது. அரசின் பாதுகாப்புப் படையினரால் திட்டமிடப்பட்டு நூலகம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. அதைத்தான் எம்மாலும் உலகின் கண்ணியமான பிரஜைகளாலும் பொறுக்கமுடியாது.

''உலக வரலாற்றில் முக்கியமான சம்பவம், பெறுமதியான புத்தகங்களை முழுமையாகச் சாம்பலாக்கியுள்ளனர். இவற்றின் இழப்பை மதிப்பிட முடியாது. எதிர்கால செல்வங்களான குழந்தைகள் உபயோகத்திற்காக தற்காலிகமாக இந் நூல் நிலையத்தை ஆரம்பித்துள்ளோம். தமிழ் குலத்தின் புகழை உலகம் அறிய மீண்டும் இந்நூல் நிலையத்தை கட்டி எழுப்ப நிதி உதவிஅளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நூல் நிலயம் எரிவதாக தகவல் கிடைத்ததும் ஆணையாளர், உடன் வந்து உதவி செய்தற்கும் உயிரையும் மதியாது தீயை அணைக்க முயற்சித்த சிற்றூழியருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். [க]

## ஆலய உற்சவம்

[யாழ்ப்பாணம்]


உரும்பராய் கற்பக விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமைநண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது தொடர்ந்து பதினன்கு நாட்கள் உற்சவம் நடைபெறும்.

### சந்தேக நபர்கள்

[1ம் பக்கத் தொடர்ச்சி

நீதவான் சந்தேகநபர்கள் இருவரையும் இம்மாதம் 1ம் திகதிவரையும் மீண்டும் றிமாண்டில் வைக்கும்படி உத்தர விட்டார்.

## 31-வது நாள் நினைவாஞ்சலி



### கந்தையா கனகசுந்தரம்

(பொலிஸ் சார்ஜன்ட்)

தோற்றம்: 17-2-1932 மறைவு: 4-6-1981

எங்கள் வாழ்வு வளம்பெற அயராது உழைத்து இடைநடுவில் எம்மை மீளாத் துயரில் தவிக்க விட்டு விட்டு மறைந்துவிட்டீர்கள். அன்புத் தெய்வமே, செல்வமே நீங்கள் விட்டுச்சென்ற உங்கள் செல்வங்களின் பணியை முடிக்கும் வழி தெரியாமல் என்றும் உங்களை நினைத்து வாடி வதங்குகிறோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய,

உங்கள் நினைவால் வாடும்
அன்பு மனைவி, மக்கள், சகோதரிகள்,
மருமக்கள், மைத்துனர்.

'மகேஸ்வர கிரி'
மீசாலை வடக்கு,
மீசாலை.

0211

## தேவை

புடவை வியாபாரத்தில் நல்ல அனுபவமும் 5 வருட தேர்ச்சியுமுள்ள ஆண் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு: க. நாகமுத்து அன் சன், 48-50, பெரிய கடை, யாழ்ப்பாணம். 0216

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981ம் ஆண்டு ஜூலை மாதம் 4-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office SrLanka
Regd No. QB 100286/81. P. O. Box 49. Jaffna. தற்காலிக தொலைபேசி: 7707